பெறப்பட்டது
01 AUG 2023
மீன்வளம் (ம) மீனவர் நலத்துறை
நந்தனம், சென்னை-600 035.

**சுருக்கம்**

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை – சுருக்குமடி வலை பயன்பாடு – SLP(C) No.8442/21-ற்கான இடைக்கால தீர்ப்பாணை பெறப்பட்டது – IND-TN-16-MM-1439 மற்றும் IND-TN-16-MM-1440 ஆகிய விசைப்படகுகளுக்கு சுருக்குமடி வலையை பயன்படுத்தி மீன்பிடிக்க அனுமதி வழங்கி ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் (மீன்-4) துறை**

(ஆடி-11, சோபகிருது வருடம், திருவள்ளுவர் ஆண்டு 2054)

அரசாணை (டி) எண்.484 நாள்: 27.07.2023

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.40, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் (மீன்-5)துறை, நாள் 25.03.2000.
2. W.P.No.5356/2021-ற்கான மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பாணை, நாள் 20.04.2021.
3. SLP(C) No.8442/21-ற்கான மாண்பமை உச்சநீதிமன்றத்தின் இடைக்கால தீர்ப்பாணை, நாள் 24.01.2023.
4. SLP(C) No.8442/21-ன் தொடர்புடைய W.P(C) No.710/22-ன் இடையீட்டு மனு (IA No.47843/23)-ற்கான மாண்பமை உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பாணை, நாள் 28.04.2023.
5. மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையரின் கடித ந.க. எண்.8870/ஜே5/2022, நாள் 16.06.2023.

_____

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழக கடற்கரை கிராமங்களில் உள்ள மீனவர்கள் சுருக்குமடி வலைகளைக் கொண்டு, மீன்பிடிக்க தமிழ்நாடு அரசால் தடை விதிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

2. அதனைத் தொடர்ந்து, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பில், தமிழ்நாட்டில் 5 கடல் மைல் சுற்றளவில் சுருக்குமடி வலையை பயன்படுத்தி, மீன்பிடிக்க உள்ள தடையினை நீக்கக்கோரி திரு.பீட்டர்ராயன் என்பவர் தொடர்ந்த வழக்கினை தள்ளுபடி செய்து ஆணை வழங்கியது. மேற்படி தீர்ப்பாணையினை எதிர்த்து, திரு.பீட்டர்ராயன் என்பவர் மாண்பமை உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில், மேற்படி நீதிமன்றம், மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட இடைக்கால தீர்ப்பில், தமிழ்நாட்டின் 12 கடல் மைல்

எல்லைக்கப்பால் சிறப்பு பொருளாதார மண்டலத்திற்குள் (SEZ) சுருக்குமடி வலைகளை கொண்டு பின்வரும் நிபந்தனைகளுடன் மீன்பிடிக்க அனுமதி அளித்து ஆணை பிறப்பித்துள்ளது:-

i) இன்றைய தேதியில் பதிவு செய்யப்பட்ட மீன்பிடி கலன்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும், அதாவது கடல் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையச் சட்டம், 1972 (மத்திய சட்டம் 13, 1972) பிரிவு 11-இன் கீழ் பதிவு செய்யப்பட்ட மற்றும் தமிழ்நாடு மாநிலத்தின் தற்போது நடைமுறையில் உள்ள விதிகள் அல்லது ஒழுங்குமுறைகளின்கீழ் பதிவு செய்யப்பட்ட மீன்பிடி கலன்கள்.

ii) அங்கீகரிக்கப்பட்ட கண்காணிப்பு கருவிகள் (Vessel Tracking System-VTS) பொருத்தப்பட்ட படகுகளுக்கு மட்டுமே மீன்வளத் துறையினால் அனுமதி வழங்கப்பட வேண்டும். அக்கருவிகள் படகின் கடற்பயண காலத்தில் செயல்பாட்டில் இருக்க வேண்டும்.

iii) அம்மீன்பிடி கலன்கள் வாரத்திற்கு இரண்டு முறை மட்டுமே இயக்க அனுமதிக்கப்படும், அதாவது ஒவ்வொரு வாரமும் திங்கள் மற்றும் வியாழன் ஆகிய கிழமைகளில் மட்டுமே மீன்பிடிக்க அனுமதிக்கப்படும். மீன்பிடி தடைகாலம் போன்ற இதர கட்டுப்பாடுகள் அனைத்தும் பொருந்தும்.

iv) இந்த அனுமதி வழங்கப்படும் மீன்பிடி கலன்கள் காலை 8 மணிக்கு அல்லது அதற்குப் பிறகு கடற்கரையிலிருந்து புறப்பட்டு, அதே நாளில் மாலை 6 மணிக்குள் அனுமதிக்கப்பட்ட இடத்திற்கு கரை திரும்ப வேண்டும்.

v) படகில் செல்லும் அனைத்து நபர்களும் தங்களுடைய பயோமெட்ரிக்/புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையை வைத்திருக்க வேண்டியது கட்டாயம் ஆகும்.

vi) மீன்வளத் துறை, கடலோர பாதுகாப்பு குழுமம், இந்திய கடலோர காவல்படை மற்றும் இந்திய கடற்படை ஆகியோருக்கு கலன் கண்காணிப்பு அமைப்பின் (VTS) குறியீட்டை வழங்க வேண்டியது கட்டாயமாகும்.

vii) மாநில மீன்வளத்துறை சுருக்குமடி மீன்பிடி படகுகளுக்கான வண்ணக் குறியீட்டை வழங்க வேண்டும்.

viii) இந்த மீன்பிடி படகுகளின் பதிவு எண் நன்றாக தெரியும்படி எழுதப்பட்டிருக்க வேண்டும். இப்படகுகள் மாநில கடல் எல்லைக்கப்பால் மட்டுமே மீன்பிடிப்பு செய்துள்ளன என்பதை உறுதி செய்வதற்காக, ஒவ்வொரு படகும் ஒவ்வொரு முறையும் மீன்பிடிப்பு முடித்து கரை திரும்பிய பின் அம்மீன்பிடிப்பு பயணத்திற்கான கண்காணிப்புத் தரவுகளை (tracking data) சம்பந்தப்பட்ட மீன்வளத்துறை உதவி ஆணையர் அல்லது நியமிக்கப்பட்ட அலுவலருக்கு அன்றைய தினமே சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 3. | சுருக்குமடி வலை கொண்டு மீன்பிடிக்கவுள்ள விசைப்படகின் பதிவு எண் விவரம் மற்றும் படகு 25.01.2023 அன்றைய தேதிக்கு முன்னர் பதிவு செய்யப்பட்டதற்கான விவரம். | : | IND-TN-16-MM-1439<br>பதிவு செய்யப்பட்ட நாள் 29.10.2021 |
| 4. | இவ்விசைப்படகின் மீன்பிடி உரிம விபரம். | : | TN-L209460/23 (13.06.2023) |
| 5. | இவ்விசைப்படகின் தற்போதைய தங்குதளம்/ மாவட்டம் விபரம். | : | பழையார், மயிலாடுதுறை மாவட்டம் |
| 6. | இவ்விசைப்படகில் அங்கீகரிக்கப்பட்ட கண்காணிப்பு கருவிகள் (Vessel Tracking System-VTS) பொருத்தப்பட்ட விபரம். | : | தனியார் செயலி<br>Odaku Online Services Pvt (Ltd)<br>MAC ID: DC:OD:30: EC:AD:D3<br>மீன்வளத்துறை மூலம் பொருத்தப்பட்ட 'Transponders' கருவியை தனது படகில் பொருத்திட கோரிக்கை மனு அளித்ததன் அடிப்படையில் இக்கருவி பொருத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| 7. | சுருக்குமடி வலைக்கென அரசால் குறித்துரைக்கப்பட்ட வண்ணப்பூச்சு பூசப்பட்ட விபரம். | : | உரிய வண்ணத்தில் பூசப்பட்டுள்ளது |
| 8. | இவ்விசைப்படகில் பதிவு எண் குறித்துரைக்கப்பட்ட அளவில் தெளிவாக தெரியும் வண்ணம் எழுதப்பட்டுள்ள விவரம் | | படகில் பதிவு எண் தெளிவாக தெரியும் வண்ணம் எழுதப்பட்டுள்ளது |
| 9. | இவ்விசைப்படகினை நிறுத்த / புறப்பட/ திரும்பிட குறிப்பிடப்பட்டுள்ள மாவட்ட நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தங்குதள விவரம் | : | பூம்புகார் மீன்பிடி துறைமுகம், மயிலாடுதுறை மாவட்டம் |

ix) மீன்வளத் துறையால் குறிப்பிடப்படும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தளத்தில் மட்டுமே இப்படகுகளை நிறுத்தவோ / கரையேற்றவோ அனுமதிக்கப்படும்.

x) சுருக்குமடி மீன்பிடிப்பு மேற்கொள்ள தனிநபர் / நிறுவனம் ஆகியவற்றிற்கு அனுமதி வழங்கிய விபரம் மற்றும் ஒவ்வொரு படகின் பதிவு எண் போன்ற விபரம் தெரிவித்திட மாநில மீன்வளத்துறையின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

3. இந்நிலையில், மாண்பமை உச்சநீதிமன்றத்தின் மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட இடைக்கால தீர்ப்பில், குறிப்பிடப்பட்ட இனங்களில் சிலவற்றிற்கு திருத்தங்கள் செய்து உரிய ஆணைகள் வழங்கிடகோரி மாண்பமை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட W.P(C) No.710/22-ன் இடையீட்டு மனு (IA No.47843/23)-ற்கான மேலே நான்காவதாக படிக்கப்பட்ட தீர்ப்பாணையில், மாண்பமை உச்சநீதிமன்றம், சுருக்குமடி வலை மீன்பிடிப்பிற்கு பயன்படுத்தப்படும் மீன்பிடி படகுகள் தமிழ்நாடு கடல்சார் மீன்பிடித்தலை ஒழுங்குபடுத்தும் சட்டம், 1983 அல்லது வணிகக்கப்பல் சட்டம் 1958 ஆகிய சட்டங்களில் ஏதேனும் ஒரு சட்டத்தின் கீழ் 24.01.2023-க்கு முன் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என ஆணை பிறப்பித்துள்ளது.

4. இந்நிலையில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் அவர்கள், மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் தலைமையிலான ஆய்வுகுழு அளித்த ஆய்வறிக்கை மற்றும் நாகப்பட்டினம் மண்டல மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இணை இயக்குநரின் பரிந்துரையின் அடிப்படையில், SLP(C) No. 8442/21-ற்கான மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட மாண்பமை உச்சநீதிமன்ற தீர்ப்பாணையில் உள்ள நிபந்தனைகளின்படி, பிரதி திங்கள் மற்றும் வியாழன் நாட்களில் மட்டும் (காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை) 12 கடல் மைல் எல்லைக்கப்பால் இந்திய நாட்டின் பிரத்தியேக பொருளாதார மண்டலத்திற்குள் சுருக்குமடி வலைகளை கொண்டு, மயிலாடுதுறை மாவட்டம், பழையார் மீனவ கிராமத்தைச் சேர்ந்த பின்வரும் படகுகளுக்கு மீன்பிடிக்க அனுமதி வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்:-

1. படகு பதிவு எண் - IND-TN-16-MM-1439

| | விவரம் | | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | விண்ணப்பதாரரின் பெயர்/ தந்தை / கணவர் பெயர் மற்றும் முழு முகவரி. | : | திரு. மணிவாசகன்,<br>த/பெ. மாணிக்கம்,<br>G-19, சுனாமிநகர்,<br>பழையார், சீர்காழி தாலுக்கா,<br>மயிலாடுதுறை மாவட்டம். |
| 2. | விண்ணப்பதாரரின் ஆதார் எண். | : | 7050 6857 5208 |

2. படகு பதிவு எண் – IND-TN-16-MM-1440

| | விவரம் | | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | விண்ணப்பதாரரின்பெயர்/ தந்தை / கணவர் பெயர் மற்றும் முழு முகவரி | : | திரு. இராஜசேகர், த/பெ. இராஜேந்திரன், 137, புதுநகர், பழையார், சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம் |
| 2. | விண்ணப்பதாரரின் ஆதார் எண். | : | 9238 5175 5831 |
| 3. | சுருக்குமடி வலை கொண்டு மீன்பிடிக்கவுள்ள விசைப்படகின் பதிவு எண் விவரம் மற்றும் படகு 25.01.2023 அன்றைய தேதிக்கு முன்னர் பதிவு செய்யப்பட்டதற்கான விவரம். | : | IND – TN – 16–MM – 1440 பதிவு செய்யப்பட்ட நாள் 31.10.2022 |
| 4. | இவ்விசைப்படகின் மீன்பிடி உரிம விபரம் | : | TN-L209450/23 (13.06.2023) |
| 5. | இவ்விசைப்படகின் தற்போதைய தங்குதளம்/ மாவட்டம் விபரம். | : | பழையார், மயிலாடுதுறை மாவட்டம் |
| 6. | இவ்விசைப்படகில் அங்கீகரிக்கப்பட்ட கண்காணிப்பு கருவிகள் (Vessel Tracking System-VTS) பொருத்தப்பட்ட விபரம். | : | தனியார் செயலி Odaku Online Services Pvt (Ltd) MAC ID: DC:OD:30:EC:AE:1A மீன்வளத்துறை மூலம் பொருத்தப்பட்ட 'Transponders' கருவியை தனது படகில் பொருத்திட கோரிக்கை மனு அளித்ததன் அடிப்படையில் இக்கருவி பொருத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| 7. | சுருக்குமடிவலைக்கென அரசால் குறித்துரைக்கப்பட்ட வண்ணப்பூச்சு பூசப்பட்ட விபரம். | : | உரிய வண்ணத்தில் பூசப்பட்டுள்ளது |
| 8. | இவ்விசைப்படகில் பதிவு எண் குறித்துரைக்கப்பட்ட அளவில் தெளிவாக தெரியும் வண்ணம் எழுதப்பட்டுள்ள விவரம். | | படகில் பதிவு எண் தெளிவாக தெரியும் வண்ணம் எழுதப்பட்டுள்ளது |

| | | | |
|---|---|---|---|
| 9. | இவ்விசைப்படகினை நிறுத்த/ புறப்பட / திரும்பிட குறிப்பிடப்பட்டுள்ள மாவட்ட நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தங்குதள விவரம். | : | பூம்புகார் மீன்பிடி துறைமுகம், மயிலாடுதுறை மாவட்டம் |

6. மேலே பத்தி 5-ல் உள்ள மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் அவர்களின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து, அதனை ஏற்கலாம் என முடிவு செய்து அதன்படி, மேலே மூன்று மற்றும் நான்காவதாக படிக்கப்பட்ட மாண்பமை உச்சநீதிமன்ற இடைக்கால தீர்ப்பாணைகளில் உள்ள அனைத்து நிபந்தனைகளையும், மயிலாடுதுறை மாவட்டம், பழையார் மீனவ கிராமத்தைச் சேர்ந்த IND-TN-16-MM-1439 மற்றும் IND-TN-16-MM-1440 ஆகிய பதிவெண்கள் கொண்ட இரு விசைப்படகுகளின் உரிமையாளர்கள் பூர்த்தி செய்துள்ளனர் என மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் தெரிவித்துள்ள நிலையிலும், தனியர்கள் உறுதியளித்துள்ள நிலையிலும், மேற்படி படகுகளுக்கு 12 கடல் மைல் எல்லைக்கு அப்பால் இந்திய நாட்டின் பிரத்தியேக பொருளாதார மண்டலத்திற்குள் சுருக்குமடி வலைகளை கொண்டு மீன்பிடிக்க அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

7. மேலே பத்தி 6-இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை, அனுமதி அளிக்கப்பட்ட மேற்காணும் விசைப்படகுகளின் உரிமையாளர்கள் மீறும் பட்சத்தில், அப்படகுகளுக்கான அனுமதியினை திரும்ப பெற்று கொள்ள வேண்டும் என்றும் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

மங்கத் ராம் சர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர், சென்னை-35.
✓சம்மந்தப்பட்ட தனியர்கள் (மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் அவர்கள் வழியாக)

நகல்
மாண்புமிகு அமைச்சர் (மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்பு,) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

28/7/2023
பிரிவு அலுவலர்

28/7/23